சிற்றூர் மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாக திகழும் நிகழ் கலைகள் பழந்தமிழ் மக்களின் வாழ்வியலை எடுத்துக் கூறும் ஆவணங்களாகத் திகழ்கின்றன.

## கரகாட்டம்

'**கரகம்**' எனப்படுவது பித்தளை செம்பு அல்லது சிறிய குடமாகும். இதனை தலையில் வைத்து தாளத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம் எனப்படுகிறது. இது கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

⇒ **கரகத்தை உருவாக்கும் முறை:**

தலையில் நிற்பதற்கு ஏதுவாக செம்பின் அடிப்பாகம் உட்புறமாக தட்டப்பட்டு உட்புறத்தில் குறிப்பிட்ட எடை அளவில் பச்சரிசி அல்லது மணல் நிரப்பப்படுகிறது. கரகத்தின் வெளிப்புறத்தில் கண்ணாடி மற்றும் பூக்கள் கொண்டு அலங்காரம் செய்து உச்சியில் கிளி பொம்மை பொருத்திய குச்சியை செருகி வைக்கின்றனர்.

⇒ **இசைக்கருவிகள்:**

இந்த ஆட்டத்திற்கு,

- நையாண்டி மேளம்
- நாகசுரம்
- தவில்
- பம்பை

போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன.

⇒ **ஆடுபவரின் எண்ணிக்கை மற்றும் இனம்:**

இத்தனை பேர் தான் ஆட வேண்டும் என்ற வரையறை இல்லை. ஆண் பெண் இருபாலரும் ஆடுவர். சில சமயங்களில் ஆண், பெண் வேடமிட்டு ஆடுவதும் உண்டு.

⇒ **இலக்கியச் சான்றுகள்:**

- புறநானூற்றில் '**நீரற வறியாக் கரகத்து**' என்ற தொடர் இடம் பெற்றுள்ளது.
- சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய **11** வகை ஆடல்களில் ஒன்றான 'குடக்கூத்து' என்ற பாடல் வகை கரகாட்டத்திற்கு அடிப்படை என்று கருதப்படுகிறது.
- தமிழகத்தில் கரகாட்டம் நடைபெறும் மாவட்டங்கள் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி.

## மயிலாட்டம்

மயில் வடிவத்தில் அமைந்துள்ள கூட்டுக்குள், ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு காலில் கட்டப்பட்டுள்ள சலங்கை ஒலிக்க, மயிலின் அசைவுகளை ஆடி காட்டுவது மயிலாட்டம் எனப்படுகிறது. இது கரகாட்டத்தின் துணை ஆட்டம் ஆகும்.

⇒ **இசைக்கருவி:**
- நையாண்டி மேளம்

⇒ **மயிலாட்டத்தின் அடவு வகைகள்**
- ஊர்ந்து ஆடுதல்
- மிதந்து ஆடுதல்
- சுற்றி ஆடுதல்
- இறகை விரித்தாடுதல்
- தலையைச் சாய்த்து ஆடுதல்
- தாவியாடுதல்
- இருபுறமும் சுற்றி ஆடுதல்
- அகவுதல்
- தண்ணீர் குடித்துக் கொண்டே ஆடுதல்

## காவடியாட்டம்

'**கா**' என்றால் பாரத்தை தாங்கும் கோள் (கம்பு) என்பது பொருளாகும்.

⇒ **காவடியை உருவாக்கும் முறை:**

மரத்தண்டில் இரு முனைகளிலும் சிறப்ப வேலைபாடு உள்ள பலகை பொருத்தப்பட்டு, மூங்கில் குச்சிகளால் அரை வட்டமாக



www.tnpscgroup4.in

இணைக்கப்படுகிறது. அரைவட்ட பகுதி பட்டு துணியால் மூடப்பட்டு இருபுறமும் மயிலிறகு கற்றைகளை பொருத்தி, மணிகளால் அழகு செய்யப்படுகிறது.

⇒ **காவடியின் வகைகள்:**

- மச்சக்காவடி
- சர்ப்பக்காவடி
- பூக்காவடி
- தேர்க்காவடி
- பறவைக்காவடி

⇒ **சிறப்பு:**

- இலங்கை, மலேசியா உள்பட புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்படுகிறது.

## ஒயிலாட்டம்

ஒரே நிறத்துணியை முண்டாசு போல கட்டியும், காலில் சலங்கை அணிந்தும், கையில் வைத்துள்ள சிறு துணியை இசைக்கேற்ப வீசியும், ஒயிலாக ஆடும் ஆட்டம் ஒயிலாட்டம் ஆகும்.

⇒ **இசை கருவிகள்:**

- தோலால் கட்டப்பட்ட குடம்
- தவில்
- சிங்கி
- டோலக்
- தப்பு

⇒ **ஒயிலாட்டம் ஆடும் முறை:**

- இந்த ஆட்டம் பெரும்பாலும் ஆண்களால் மட்டுமே நிகழ்த்தப்படுகிறது.
- இரு வரிசையாகவும் ஒருவருக் கொருவர் இடம் விட்டு விலகி நின்றும் ஆடுகின்றனர்.

## தேவராட்டம்

வானத்து தேவர்கள் ஆடிய ஆட்டம் என்பது இதற்கு பொருளாகும். இடையில் வேட்டி மற்றும் சிறு துணி, தலையில் சிறு துணி, காலில் சலங்கை முதலிய எளிய ஒப்பனைகளுடன் ஆடப்படுகிறது. '**உறுமி**' என்பது இதன் வேறு பெயராகும். இது சடங்கு சார்பாக ஆடப்படுகிறது.

⇒ **இசை கருவி:**

- தேவ தந்துபி

⇒ **ஆடப்படுபவரின் எண்ணிக்கை மற்றும் இனம்:**

- இந்த ஆட்டத்தில் 8 முதல் 13 கலைஞர்கள் மட்டுமே ஆட வேண்டும்.
- ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டமாகும்.

## சேவையாட்டம்

- தேவராட்டம் போன்றே ஆடப்படும் ஆட்டம் சேவை ஆட்டம் ஆகும்.
- இது இசை சார்பு கலையாகவும், வழிபாட்டு கலையாகவும் நிகழ்த்தப்படுகிறது.

⇒ **இசைக்கருவிகள்:**

- சேவைப் பலகை
- சேமக்கலம்
- ஜால்ரா

## பொய்க்கால் குதிரை ஆட்டம்

- **'போலச் செய்தல்'** என்ற பண்பினை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆட்டம் ஆடப்படுகிறது.
- இது மராட்டிய காலத்தில் தஞ்சைக்கு வந்ததாக கூறப்படுகிறது.

⇒ **ஆடப்படும் முறை:**

மரத்தாலான பொய்க்காலில் நின்று கொண்டு, குதிரை வடிவத்தில் உள்ள கூட்டில் உடம்பை நுழைத்துக் கொண்டு, காலில் சலங்கை அணிந்து ஆடுவர்.

⇒ **அலங்காரம்:**

இந்த ஆட்டத்தை ஆடுவோர் அரசன், அரசி போல உடை அணிந்து தலையில் கிரீடம் அணிந்து ஆடுவர்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ **<u>இசைக்கருவிகள்:</u>**

- நையாண்டி மேளம்
- நாகசுரம்
- இந்த ஆட்டத்திற்கு பாடல்கள் பாடப்படுவதில்லை

⇒ **<u>வேறுபெயர்கள்:</u>**

| | |
|---|---|
| **தமிழ்நாடு** | புரவியாட்டம், புரவி நாட்டியம் |
| **இராஜஸ்தான்** | கச்சிகொடி |
| **கேரளா** | குதிரைக்களி |

## தப்பு ஆட்டம்

**'தப்பு'** என்ற தோற்கருவியை இசைத்துக்கொண்டே அதன் இசைக்கேற்ப ஆடுகின்ற ஆட்டம் ஆகும். தப்பு என்பது வட்ட வடிவமாக அமைந்த தோற்கருவி ஆகும்.

⇒ **<u>ஆட்டத்தின் வேறு பெயர்கள்:</u>**

- தப்பாட்டம்
- தப்பட்டை
- தப்பு

⇒ **<u>இசை கருவியின் வேறு பெயர்:</u>**

- பறை

⇒ **<u>தப்பாட்டம் நடைபெறும் நிகழ்வுகள்:</u>**

- கோயில் திருவிழா
- திருமணம்
- இறப்பு
- விழிப்புணர்வு முகாம்
- விளம்பர நிகழ்ச்சிகள்

⇒ **<u>ஆட்டத்தின் கூறுகள்:</u>**

- வட்டமாக ஆடுதல்
- இரண்டு வரிசையாக எதிர்திசையில் நின்று ஆடுதல்
- குதித்து குதித்து ஆடுதல்
- உட்கார்ந்து எழுதல்
- நடையாட்டம்.

⇒ **<u>ஆடுவோர்:</u>**

- ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டம் தற்போது பெண்களாலும் ஆடப்படுகிறது.
- குழுவாக பங்கேற்று ஆடுகின்றனர்.

⇒ **<u>இலக்கியச் சான்றுகள்:</u>**

- அருணகிரிநாதர் தப்பாட்ட இசை குறித்து **'திருப்புகழ்'** என்ற தன்னுடைய நூலில் பதிவு செய்துள்ளார்.
- தொல்காப்பியரின் தொல்காப்பியத்தில் கருப்பொருள்களில் ஒன்றாக **பறை** இடம் பெற்றுள்ளது.

## புலி ஆட்டம்

- தமிழ் மக்களின் வீரத்தை சொல்லும் கலையாக இந்த ஆட்டம் நிகழ்த்தப்படுகிறது.
- இந்த ஆட்டத்தில் பாட்டு வசனம் போன்ற எதுவும் கிடையாது.

⇒ **<u>அலங்காரம்:</u>**

- உடலில் கருப்பு மற்றும் மஞ்சள் வண்ணத்தில் கோடுகள் வரைந்து, துணியாலான வாலை இடுப்பில் கட்டிக்கொண்டு ஆடுவர்.

⇒ **<u>இசைக்கருவி</u>**

- தப்பு (பறை)

⇒ **<u>ஆடுபவரின் எண்ணிக்கை:</u>**

- ஒருவர் அல்லது இருவர் ஆடுவர்

⇒ **<u>ஆட்டத்தின் பல்வேறு அடவுகள்:</u>**

- புலியைப் போன்று நடத்தல்
- பதுங்குதல்
- பாய்தல்
- உறுமுதல்

## தெருக்கூத்து

- நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்படும் கலையாகும். திறந்தவெளியை ஆடுகளம் ஆக்கி ஆடுவதால் **தெருக்கூத்து** என பெயர் பெற்றது.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- முதலில் களத்து மேடுகளில் ஆடப்பட்ட இக்கலை, தற்போது தெரு சந்திப்புகளில் நிகழ்த்தப்படுகிறது.
- கோயில் சார்ந்த கலையாக மாறி உள்ள இதனை, **கதக்களி** போன்று **செவ்வியல் கலையாக** மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

⇒ **வழிபாட்டு கூறுகள்:**

- தெருக்கூத்து திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாக இருக்கிறது.
- அர்ச்சுனன் தபசு என்ற பகுதி, மழை வேண்டி நிகழ்த்தப்படுகிறது.

⇒ **வளர்ச்சி நிலை:**

முதலில் வேளாண்மை செய்வோரின் கலையாக இருந்தது. தற்போது பொழுதுபோக்கு கூறுகளை பெற்று நாடகமாக வளர்ந்துள்ளது.

## தோற்பாவை கூத்து

தோளில் செய்த வெட்டு வரைபடங்களை விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்தி, கதைக்கேற்ப மேலும் கீழும், பக்கவாட்டிலும் இசைக்கேற்பவும் உரையாடலுக்கு ஏற்பவும் அசைத்துக் காட்டுவது தோற்பாவைக் கூத்து ஆகும்.

⇒ **இக்கலையுடன் இணைந்துள்ள பிற கலைகள்:**

- இசை
- ஓவியம்
- நடனம்
- நாடகம்
- பல குரலில் பேசுதல்.

⇒ **வேறு பெயர்கள்:**

- கையுறைப் பாவைக் கூத்து
- பொம்மலாட்டம்

⇒ **இலக்கியச் சான்றுகள்:**

- தோற்பாவை கூத்து குறித்த செய்திகள் சங்க காலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன.
- திருக்குறளில் மரப்பாவையை பற்றி கூறப்பட்டுள்ளது.
- திருவாசகத்திலும், பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவை கூத்து பற்றிய செய்திகளை காண முடிகிறது.

⇒ **கூட்டுக் குடும்ப கலை:**

- தோற்பாவைக் கூத்து ஊர் ஊராக சென்று நிகழ்த்துகிற கூட்டு குடும்ப கலையாக விளங்குகிறது.

## நாட்டுப்புற கைவினை கலைகள்

⇒ **கைவினைக் கலைகள்:**

- மண்பாண்டங்கள் செய்தல்
- மூங்கில் பொருள்கள் செய்தல்
- பனை ஓலையில் பொருள்கள் செய்தல்
- பிரம்பினால் பொருள்கள் செய்தல்
- மரப் பொருள்கள் செய்தல்
- தஞ்சாவூர் தட்டு செய்தல்
- காகித பொம்மைகள் செய்தல்
- மாட்டுக் கொம்பு
- சங்கு
- கிளிஞ்சல்கள்
- தந்தங்கள் போன்றவற்றில் பொருள்களை உருவாக்குதல்.

⇒ **மட்பாண்டங்கள் செய்தல்:**

சிந்து சமவெளி அகழாய்வில் பானை ஓடுகள் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டில் கிடைத்துள்ள மண்பாண்டங்கள்.

| **ஆதிச்சநல்லூர்** | **முதுமக்கள் தாழிகள்** |
| --- | --- |
| செம்பியன் கண்டியூர் நாகை மாவட்டம் | கலை அழகு மிகுந்த மண் கலங்கள் |
| மதுரைக்கு அருகில் உள்ள கீழடி | சுடுமண் பொருள்கள் |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- குளங்கள், ஆற்றங்கரைகள், வயல்வெளிகள் ஆகிய இடங்களில் உள்ள களிமண்ணை எடுத்து வந்து, அதில் மணல், சாம்பல், நீர் சேர்த்து பக்குவப்படுத்தி மண்பாண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.
- மட்பாண்டங்கள் தயாரிக்க பயன்படும் **சக்கரம் 'திருவை'** எனப்படுகிறது.
- பானை செய்தல் '**பானை வனைதல்**' எனப்படுகிறது.
- சுடுமண் சிற்பக்கலை ஆங்கிலத்தில் '**டெரகோட்டா**' எனப்படுகிறது. இக்கலையில் பல வடிவங்கள் சிற்பங்களாக வடிக்கப்படுகின்றன.

⇒ **மூங்கில் பொருள்கள்:**

- மட்டக் கூடை
- மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி
- தட்டுக்கூடை
- பழக்கூடை
- கொட்டுக் கூடை
- பூக்கூடை
- முறம்
- பூத்தட்டு
- ஏணி
- கட்டில்
- சதுரத்தட்டி
- புல்லாங்குழல்
- கூரைத்தட்டி
- புட்டுக் குழாய்
- துடைப்பம்
- மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி

கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய்.

கல் மூங்கில் மலை மூங்கில் கூட்டு மூங்கில் என மூன்று வகை மூங்கில்கள் உள்ளன. அவற்றுள் கூட்டு மூங்கில்களே கைவினைப் பொருள்கள் செய்வதற்கு ஏற்றவை.

**கோரைப்பாய் வகைகள்**

| | |
|---|---|
| **தடுக்குப் பாய்** | குழந்தைகளை படுக்க வைப்பது |
| **பந்திப் பாய்** | உணவு உண்ணும் போது அமர்வது |
| **திண்ணைப் பாய்** | உட்காரவும் படுக்கவும் பயன்படுவது |
| **பட்டுப்பாய்** | திருமணத்திற்கு பயன்படுவது |
| **தொழுகைப் பாய்** | இஸ்லாமியர்கள் தொழுகைக்கு பயன்படுத்துவது |

முற்காலத்தில் பாய்மரக் கப்பல்களில் பாய் பயன்பட்டது, என்பதை புறநானூறு, '**கூம்போடு மீட்பாய் கலையாது**' என்று கூறுகிறது.

⇒ **பனையோலையில் செய்யப்படும் பொருள்கள்:**

- ஓலைச்சுவடிகள்
- சுளகு
- கிளுகிளுப்பை
- விசிறி
- பொம்மைகள்
- தொப்பி
- சிறிய கொட்டான்கள்
- ஓலைப்பாய்
- பெரிய கூடைகள்

⇒ **பிரம்பு வகை பொருள்கள்:**

- கட்டில்
- பூக்கூடை
- ஊஞ்சல்
- இடியாப்பத்தட்டு
- நாற்காலி
- அர்ச்சனை தட்டு
- மேசை
- வெற்றிலைப் பெட்டி

- பிரம்பு மிகவும் குளிர்ச்சியானது. எனவே அதில் அமர்வதும், படுப்பதும் உடல்நலத்திற்கு மிகவும் நல்லதாகும்.
- பிரம்பு என்பது கொடி வகையை சேர்ந்த தாவரம். இதன் தாவரவியல் பெயர் '**கலாமஸ் ரொடாங்**' (Calamus Rotang) என்பதாகும்.
- இது நீர் நிறைந்த வாய்க்கால் வரப்புகளிலும், மண் குகைகளிலும், செழித்து வளரும். தமிழகத்தில் இப்போது இஃது அருகி விட்டது.
- நமது தேவைக்காக அசாம், அந்தமான், மலேசியா ஆகிய இடங்களில் இருந்து தருவிக்கப்படுகிறது.

⇒ **பனை நாரிலிருந்து,**

- கயிறு,
- கட்டில்,
- கூடை

போன்றவை செய்யப்படுகின்றன. **தமிழ்நாட்டின் மாநில மரம் பனை.**



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in